பூஞ்சோலை

கௌரவ ஆசிரியர் அழ. வள்ளியப்பா

1-9-54 .... அணு-2

1157

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
29 SEP 1954
MADRAS

1157
3-54

199265

பூஞ்சோலை

மலர் 4

இதழ் 6

சிறுவர், சிறுமியரின்

மாத மிருமுறை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 SEP 1954
MADRAS

1-9-54

The Favourite
Tamil Bi-Monthly
for Boys and Girls

சந்தா:

வருடம்	3 0
ஆறு மாதம்	1 8
தனிப் பிரதி	0 2

த. பெ. தெ. 1803

Edited, Printed and Published by
Rama. Arunachalam at Shanti Press,
135, Coral Merchant St. ,Madras-1.

ஆசிரியர் சொல்லுகிறார்

இந்த இதழைப் பார்த்ததுமே, 'அப்பாடா! இப்போதாவது நமது நெடுநாளைய ஆசை நிறைவேறியதே!' என்று நினைத்து நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்கள். உங்கள் மகிழ்ச்சிதானே எங்கள் மகிழ்ச்சி? அதனால், நாங்களும் இந்த மாற்றம் குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

எனது மதிப்புரை என்ற தலைப்பில் ஒரு புதுப் பகுதியை ஆரம்பிக்கக் கருதியிருக்கிறோம். இந்த இதழில் வெளி வந்துள்ள சிறுகதைகளை நன்றாய்ப் படியுங்கள். படித்துவிட்டு இந்தக் கதைகளில் ஏதேனும் ஒரு கதையை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றி விமர்சனம் எழுதி அனுப்புங்கள். ஒரு கதை உங்களுக்குப் பிடித்திருக்கலாம்; அல்லது பிடிக்காதிருக்கலாம்; அல்லது கதையில் சில இடங்கள் பிடித்தும், சில இடங்கள் பிடிக்காமலும் இருக்கலாம். காரணங்களுடன் உங்கள் அபிப்பிராயத்தை 15 நாட்களுக்குள் எழுதி அனுப்புங்கள். சிறந்த விமர்சனத்துக்கு ரூபாய் மூன்று பரிசளிப்போம். இப்படி ஒவ்வோர் இதழுக்கும் பரிசு உண்டு.

இன்னும் ஒரு புதுப் பகுதி விரைவில் ஆரம்பமாகும். சிறுவர்களில் பலர் பத்திரிகை விற்பது, செருப்புத் தைப்பது, தச்சு வேலை செய்வது—இப்படி எத்தனையோ தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டுள்ள தம்பிகள் தங்கள் தொழில் அனுபவங்களைச் சுவையாக எழுதப் போகிறார்கள்.

'வனஜாவின் அண்ணன்' தொடர் கதையை ஆரம்பத்திலிருந்து அநேக தம்பி தங்கைகள் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்காத வகையில், அந்தத் தொடர்கதைப் பகுதியைமட்டும் முன்பு அச்சிட்ட அளவிலேயே இப்போதும் அச்சிட்டுள்ளோம். பைண்ட் செய்வதற்கு இது சௌகரியமாயிருக்கும்.

இனி உங்களை முன்போல் மாதம் ஒருமுறையல்ல; இருமுறை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியதே.

—அழ. வள்ளியப்பா.

மரகதமணி

நெ. சி. தெய்வசிகாமணி

"கசாப்புக் கடைக்காரனுக்குக் காயத்ரி ஜபத்தின் பெருமை தெரியுமா? சர்க்கஸ் வித்தை செய்பவனுக்குச் சவுக்காரம் செய்வது எப்படி என்று தெரிந்திருக்க நியாயமில்லை அல்லவா? அதைப் போலத்தான் அந்தச் சிறுவனுக்கும், அந்த அற்புத மரகதமணியின் பெருமை தெரியவில்லை; மதிப்பும் தெரியவில்லை" என்ருர், பக்கத்துவீட்டு ராவுஜி தாத்தா.

"எந்தச் சிறுவனுக்கு மரகத மணியின் பெருமையும் மதிப்பும் தெரியவில்லை தாத்தா?" என்று கேட்டேன், நான்.

"அவசரப்படாதே! சொல்லுகிறேன்; கேள்" என்று சொல்லி விட்டு ஒரு சிட்டிகை பொடியை எடுத்து 'சர்' ரென்று உறிஞ்சி விட்டுக் கதையை ஆரம்பித்தார், தாத்தா:

"நரஹரி ராவுக்கு ஒரு பையன் இருந்தான். அவன் பெயர் சுகதேவ். நரஹரிராவின் முன்னேர்கள் தஞ்சாவூர் ராஜா சரபேந்திர பூபதியிடம் வேலை பார்த்து வந்தவர்கள். அந்தக் காலத்தில் அவர்கள் நன்ருக வாழ்ந்தவர்கள். ஆனல், இந்தக் காலத்தில் நரஹரி ராவுக்கு அந்த மாதிரியான ராஜாங்க உத்தியோகம் எதுவும் கிடைக்கவில்லை; சாதாரண குமாஸ்தா வேலைதான் கிடைத்தது. மிகவும் கஷ்டப்பட்டுக் குடும்பத்தை நடத்தி வந்ததுடன் தம் மகன் சுகதேவையும் படிக்க வைத்தார்.

ஒரு நாள், காரியாலயத்திலிருந்து வந்து வீட்டில் ஜுரமாகப் படுத்த நரஹரிராவ் மறுபடியும் எழுந்திருக்கவில்லை. ஒரு வாரத்திற்குள் இறந்துவிட்டார். அவர் இவ்வளவு நாட்களாகக் கஷ்டப்பட்டு உழைத்துக் கடைசியில் தம் மகனுக்கும் மனைவிக்கும் ஒரு சல்லிக்காசுகூட வைக்காமல் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு ஒருநாள் தம் மனைவி துர்க்காபாயைக் கூப்பிட்டார். "சுகதேவ் இருக்கிருனா?" என்று கேட்டார். "இல்லை" என்ருள் துர்க்காபாய்.

"இதோ பார். அதோ அந்தத் தகரப் பெட்டிக்குள்ளே ஒரு சிறியமரப்பெட்டி இருக்கிறதே, அதை எடுத்து வா" என்ருர் நரஹரிராவ்.

யானைச் சண்டை



அக்பர் சக்கரவர்த்திக்கு யானைச் சண்டை என்றால் வெகு பிரியம். அடிக்கடி அவர் அரண்மனையில் சும்மா இருக்கும் யானைகளைக் கொண்டுவரச் செய்து, அவைகளுக்குள் பகை மூட்டிச் சண்டை போடச் செய்வார். அவை ஒன்றுடன் ஒன்று முட்டி மோதிச் சண்டை போடுவதைக் கண்டு அவர் ஆனந்தம் கொள்வார்.

அந்த அம்மாளும் அவர் சொல்லியபடி அந்த மரப்பெட்டியை எடுத்துவந்து அவரிடம் கொடுத்தாள். உள்ளே இருந்த ஒரு சிறு காகிதப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார் நரஹரிராவ். அதற்குள் ஒரு பச்சைக் கல் 'பள பள' வென்று பிரகாசித்தது!

"துர்க்கா, உனக்கு நான் ஒரு சொத்தும் வைத்துவிட்டுப் போகவில்லை என்று நினைக்காதே! இதுதான் நம் பரம்பரைச் சொத்து. என் முன்னோர்களில் ஒருவருக்கு சரபோஜி மகாராஜா பரிசாகத் தந்தது. பல பரம்பரைகளாக எங்களிடம் இருந்து வருகிறது. இதை விற்றால் பல லட்சம் ரூபாய் கிடைக்கும். ஆனால், விற்க மனம் இடம் தரவில்லை. வீரத்துக்குப் பரிசாக மன்னர் தந்த இந்த மரகதமணியையா விற்பது? எனவேதான், நான் எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் இதை விற்காமல் காப்பாற்றி வந்தேன். நீயும் கூடுமான வரையில் இதை விற்காமல் இருக்கப் பார். உன்னையும் மீறிக் கஷ்டங்கள் வந்தால் அப்போது விற்றுவிடு; பரவாயில்லை" என்று சொல்லியபடியே மரகதமணியைத் துர்க்காபாயிடம் ஒப்படைத்துவிட்டு உயிர் நீத்தார் நரஹரிராவ். இதெல்லாம் சுகதேவுக்குத் தெரியாது.

தந்தையை இழந்த சுகதேவ் பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி விட்டான். அவன் தாய் முறுக்கு, வடை, வறுவல் முதலியவைகளைச் செய்து தருவாள். சுகதேவ் அவைகளைக் கடற்கரைக்குக் கொண்டு சென்று விற்று வருவான். இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

ஒருநாள் துர்க்காபாயும் நோயாகப் படுத்துவிட்டாள். சதா சர்வகாலமும் உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன அவளுக்கு நோய் வந்ததில் ஆச்சரியமில்லை. பிழைப்பும் நின்றுபோய் விட்டது. அடுப்பில் பூனை உறங்கியது. சுகதேவ் பல வைத்தியர்களிடம் சென்றான். பணமில்லாமல் வைத்தியம் பார்க்க ஒருவரும் உடன்படவில்லை.

எப்படியும் எதையாவது விற்றாவது வைத்தியரைக் கூட்டி வந்து அன்னையின் நோயைக் குணப்படுத்திவிடுவது என்று தீர்மானித்தான், சுகதேவ்.

வீட்டில் உள்ள பொருள்களை ஆராய்ந்தான். விற்பதற்குத் தகுதியான பொருள் ஒன்றும் இல்லை. எல்லாம் தட்டுமுட்டுச் சாமான்களும், சட்டிபானைகளுமாகவுமே இருந்தன. கடைசியில் சிறிய மரப்பெட்டியில் இருந்த மரகதமணி அவன் கண்களுக்குத் தென்பட்டது! அதன்

உண்மையான மதிப்பு அவனுக்குத் தெரியாது. 'குறைந்த பட்சம் இந்தப் பச்சைக் கல்லுக்கு ஒரு பத்து ரூபாயாவது கிடைக்கும்' என்பதுதான் அவன் போட்ட மதிப்பு. நேரே கடை வீதிக்கு ஓடினன். துர்க்காபாய் தூங்கிக்கொண்டிருந்ததால் சுகதேவ் மரகதமணியைக் கொண்டு சென்றது அவளுக்குத் தெரியாது.

மரகதமணியை விற்பதற்காக ஒரு கடைக்கு எடுத்துச் சென்ருன். அந்தக் கடைக்காரன் சுகதேவை ஏற இறங்கப் பார்த்தான்.

"ஏது தம்பி இது? நிஜத்தைச் சொல்லு. இல்லாவிட்டால் போலீசுக்குச் சொல்லி அனுப்பிவிடுவேன்" என்ருன்.

"ஐயா, நீங்கள் நினைக்கிற மாதிரி நான் இதைத் திருடிக்கொண்டு வரவில்லை. இது என் வீட்டில் இருந்தது. என் அம்மா நோயாகக் கிடக்கிருள். வைத்தியருக்குக் கொடுப்பதற்காக இதை விற்க வந்தேன். நீங்கள் வேண்டுமானுலும் என் வீட்டுக்கு வந்து விசாரித்துப் பாருங்கள் ஐயா" என்ருன் சுகதேவ்.

"அது சரி, இது வெறும் கண்ணுடிக் கல்தானே! இதற்கு எவன் பணம் தருவான்? சரி, போகட்டும். இந்தா இரண்டு ரூபாய்" என்று கூறி இரண்டு ரூபாயை எடுத்து நீட்டினன் கடைக்காரன்.

"இரண்டு ரூபாய்தானு! பார்த்துக் கொடுங்கள் ஐயா" என்று கெஞ்சினன், சுகதேவ்.

"போ, போ! நானுக இருந்தால் உனக்கு இரண்டு ரூபாய் தந்தேன். என் முதலாளியாக இருந்தால் இந்நேரம் இந்தக் கண்ணுடிக் கல்லை உன் முகத்திலேயே விட்டெறிந்திருப்பார். சீக்கிரம் ஓடிப்போய்விடு, முதலாளி வருவதற்குள்!" என்று விரட்டினன் அவன்.

'இரண்டு ரூபாயை வைத்துக்கொண்டு எந்த வைத்தியரைப் போய்க் கூப்பிடுவது? வைத்தியருக்குக் கொடுக்கப் பணம் எவ்வளவு ஆகும்? மருந்துச் செலவு எவ்வளவு ஆகும்? இரண்டு ரூபாய் எந்த மூலைக்கு!' என்று நினைத்தபடியே கடைத் தெருவில் அரை டஜன் சாத்துக்குடிப் பழங்கள் வாங்கிக்கொண்டு வீடு வந்தான் சுகதேவ்.

அவன் தாய்க்கு அப்போதுதான் மயக்கம் தெளிந்திருந்தது. "சுகதேவ்! சுகதேவ்!" என்று மெள்ளக் கூப்பிட்டாள் அம்மா. அப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டாள் போலிருக்கிறது.

"இதோ அம்மா! சாத்துக்குடிப் பழம் வாங்கி வந்திருக்கிறேன். உரித்துத் தருகிறேன்" என்று சொல்லியபடியே அம்மாவிடம் ஓடோடியும் சென்ருன்.

"வேண்டாமடா கண்ணே! ஒரு விஷயம். இனி உனக்கு யாரும் ஆதரவு கிடையாது. ஆனுலும் கவலைப்படாதே! அந்தச் சின்ன மரப்பெட்டியிலே ஒரு காகிதப் பொட்டலம் இருக்கிறது. அதில் ஒரு மரகதமணி இருக்கிறது..." என்று அம்மா சொல்ல ஆரம்பித்ததும் சாத்துக்குடிப் பழம் உரிப்பதை நிறுத்தி விட்டுக் கூர்ந்து கேட்க ஆரம்பித்தான், சுகதேவ். அம்மா தொடர்ந்து சொன்னுள்.

"அதன் மதிப்பு பல லட்சங்களுக்கு மேல் இருக்கும்..."

"ஹா!" என்ருன் சுகதேவ்.

அவன் கையிலிருந்த சாத்துக்குடிப் பழம் நழுவிக் கீழே விழுந்தது.

"ஆச்சரியப்படாதே சுகதேவ்! ... ... ஆமாம், அதை விற்றால் லட்சக் கணக்கான ரூபாய் கிடைக்கும். அது நம் பரம்பரைச் சொத்து. ராஜாங்கத்தில் பரிசாகக் கொடுத்தது. எல்லோரும் அதைப் பத்திரமாகக் காப்பாற்றி வந்தார்கள். நீயாவது அதை விற்று உன் கஷ்டத்தைப் போக்கிக் கொள்" என்றாள் அம்மா.

சுகதேவுக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. சின்னக் குழந்தை மாதிரி கேவிக் கேவி அழுதான்.

"ஐயோ! அம்மா! நான் ஒரு மடையன். ஏமாந்து போனேன்! அதன் மதிப்புத் தெரியாமல் இரண்டு ரூபாய்க்கு விற்று விட்டேன்" என்று கூறித் தலையில் 'பட், பட்'டென்று அடித்துக் கொண்டான் சுகதேவ்.

"என்ன! இரண்டு ரூபாய்க்கு விற்று விட்டாயா! எங்கே விற்றாய்?" என்று பரபரப்போடும், ஓரளவு ஆத்திரத்தோடும் கேட்டாள் அம்மா.

"வேறு யாரிடமுமில்லை; என் கடையிலேதான்!" என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தார், ஒரு கடைக்காரர்!

தாயும், பிள்ளையும் அவரைப் பார்த்தனர். அவர் கையிலே மரகதமணி இருந்தது. "தம்பி, அழாதே! எங்கேயெல்லாம் உன்னைத் தேடுவது? நீதானே இந்த அற்புதமான மரகதமணியை இரண்டு ரூபாய்க்கு விற்று வந்தவன்... ஐயோ, பாவம்! என் கடையில் புதிதாக வேலைக்கு வந்திருக்கும் ஆள் உன்னை ஏமாற்றிவிட்டான்.... தம்பி, என் கடையிலுள்ள சொத்துப் பூராவையும் உனக்குக் கொடுத்தாலும் இந்த மரகதமணிக்கு ஈடாகாது...மிகவும் நாணயத்துடன் நடைபெற்றுவரும் எங்கள் கடையில் இப்படிப்பட்ட தவறு நடந்துவிட்டதற்கு மன்னிக்க வேண்டும்...உங்கள் நிலைமை எனக்குப் புரிந்து விட்டது. இதோ இந்த மரகதமணியைத் திருப்பித் தரவே வந்தேன். அத்துடன், தம்பி, உன் அம்மாவுக்கு மருந்து வாங்க இதோ இந்தப் பதினைந்து ரூபாயையும் வைத்துக்கொள். நாங்கள் செய்த குற்றத்துக்கு அபராதமாக இருக்கட்டும்" என்று கூறி மரகதமணியையும், பதினைந்து ரூபாயையும் துர்க்காபாயின் முன்னால் வைத்துவிட்டு 'விறு விறு' என்று வெளியேறி விட்டார் கடைக்காரர்"

—இப்படிக் கூறிக் கதையை முடித்தார், ராவுஜி தாத்தா.

"அப்புறம்?" என்றேன் நான்.

"அப்புறமாவது, விழுப்புரமாவது! இப்பொழுது கதை எழுதுகிறவர்கள்கூட இப்படித்தானே அந்தரத்தில் விட்டுவிடுகிறார்கள்!" என்று சொல்லியபடியே சிரித்தார் தாத்தா.

பாட்டு எழுதுவது எப்படி ?

பாட்டு எழுதுவது மிக மிகக் கஷ்டமான காரியம் என்று நேற்று வரையில் எண்ணியிருந்தேன். இன்று அந்த எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொண்டுவிட்டேன். பாட்டு எழுதுவது கஷ்டமான காரியம் அல்ல; மிக மிகச் சுலபம். நீங்கள்கூட 'இம்' என்பதற்குள் இருநூறு பாட்டுக்களும், 'அம்' என்பதற்குள் அறுநூறு பாட்டுக்களும் எழுதிக் குவித்து விடலாம். அதற்கெல்லாம் சுலபமான வழி இருக்கிறது!

"எப்படி? எப்படி? சீக்கிரம் சொல்லு, இளிச்சவாயா?" என்கிறீர்களா? அவசரப்படாதீர்கள்! 'பொறுமை எருமையிலும் பெரிது' என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்?

முதலில் கடைத்தெருவுக்குப் போய் ஓர் 'இன்ச் டேப்' (அளவு நாடா) வாங்கிக் கொள்ளுங்கள். அது ஒன்றே போதும், பாட்டு எழுத. முதலில் வசன நடையாக—அதாவது நான் கட்டுரை எழுதுகிறேனே அதைப்போல—எழுதிக் கொள்ளுங்கள். பூராவும் எழுதி முடித்த பிறகு 'இன்ச் டேப்'பை வைத்து மூன்று மூன்று அங்குல நீளமுள்ள வரிகளாகத் துண்டியுங்கள். அப்படித் துண்டித்த நான்கு வரிகளை ஒன்றன்கீழ் ஒன்றாகப் போடுங்கள். பிறகு கொஞ்சம் இடம்விட்டுத் திரும்பவும் அதேபோல் நான்கு வரிகளைப் போடுங்கள். போட்டுக்கொண்டே போங்கள். இது தான் பாட்டு!

தப்பித் தவறி யாரேனும் கொஞ்சம் விஷயம் தெரிந்த ஆசாமி, "இது என்ன சீர் சரியாக இல்லையே! எதுகை மோனை இல்லையே! தளை தட்டுகிறதே!" என்று கேட்டுவிட்டால், அவர் முகத்தில் அடிப்பது போல (நிஜமாகவே அடித்து விடாதீர்கள்!) "இது தான் வசன கவிதை!" என்று கம்பீரமாகச் சொல்லுங்கள். உதாரணத்துக்கு ஏதாவது வேண்டுமா? இதோ தருகிறேன்.

பலர் சேர்ந்து செய்திடும் சதிதான்
சிலருக்குக் கெடுதல் விளைவிக்கும்.
இது உலகில் நடக்கும் விந்தை.
அதை நீயும் அறிந்துகொள்வாய்.

இது ஒரு பாட்டு—தப்பு, தப்பு! வசன கவிதை!

இதைப்பார்த்த பிறகு நானும் ஒரு பாட்டு எழுதினேன்.

டமீல் டுமீல் துப்பாக்கி
தகர டப்பா போணிபார்
குண்டு பட்ட காயம்தான்
முதுகில் இருக்கு இருக்குதே!

'இது என்ன பாட்டா? இதற்கு அர்த்தம் என்ன?' என்கிறீர்

களா? அதெல்லாம் என்னைக் கேட்காதீர்கள். எனக்கே சரியா கப் புரியவில்லையே!

எங்கள் வீட்டுப் பக்கத்தில் ஒரு கவிராயர் இருக்கிறார். அவர் பெயர் மண்ணடிக் கவிராயர். அவர் எதைப்பற்றி வேண்டுமானாலும் பாடல்கள் இயற்றுவார்; எத்தனை வேண்டுமானாலும இயற்றுவார். ஒன்றே காலணாவுக்கு ஒன்பது பாட்டுக்கள் பாடி விடுவார். அவர் பாடாத சமாச்சாரமே உலகில் கிடையாது. ஏழு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளித் தானும் மாண்ட நவீன நல்லதங்காளைப் பற்றிப்பத்திரிகையில்செய்திவந்திருக்கிறதா? உடனே அதைப் பற்றி எட்டுப் பக்கங்கள் வரும் படியாகப் பாடல்கள் எழுதி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். தண்டவாளத்தை விட்டு ரயில் இறங்கி விட்டதா? அதற்கும் ஒரு பாட்டு! பட்டியூர் மிட்டாதாரின் படுகொலையா? அதற்கும் ஒரு பாட்டு! இப்படிப் பாட்டாகவே எழுதிக் குவித்து விடுவார், எங்கள் மண்ணடிக் கவிராயர்.

வாணவேடி வெடித்து
வெண்டைக்காய் சாம்பார் வைத்துக்
கோண வகிடெடுத்துக்
கொய்யாப்பழம் சாப்பிட்டு
ஆனைமேல் வந்தான் எங்கள்
அழகு சிங்க ராஜா!

இந்தப் பாட்டை எழுதியதும் எனக்குப் படித்துக் காட்டினார் கவிராயர். நான் என்ன ரஸிக சிகாமணியா, 'ஆஹா! ஊஹூ!' என்று அந்தப் பாட்டை ரஸிக்க! ஆனாலும் கவிராயர் விடவில்லை. "பாட்டு எப்படி?" என்றார்.

நான் என்ன சொல்லுவேன்? பாட்டைக் கேட்டதும் என் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்ட

ஆனந்தனின்



தைப்போல ஆகிவிட்டதே அது ஒன்றே போதாதா, அவர் பாட்டு எப்படி இருந்தது என்பதற்கு அத்தாட்சி?

"இந்தப் பாட்டைக் கேட்டதும் எனக்கு ஒரு கதை கவனத்துக்கு வருகிறது" என்றேன்.

"கதையா? அதென்ன தம்பீ!" என்றார், கவிராயர்.

"ஒரு பட்டணத்தான் ஒரு பட்டிக்காட்டானைப் பார்த்து, 'இந்த ஊரிலிருந்து அடுத்த ஊருக்குப் பத்து மைல் தூரம் இருக்கும். எங்கள் ஊர் பரமசிவம் பிள்ளைக்குப் பத்து லட்சம் ரூபாய் இருக்கிறது. இந்த ஊரில் ரூபாய்க்கு நான்குபடி அரிசி விற்கிறது என்றால் என்வயது என்ன இருக்கும்?' என்றானாம். உடனே பட்டிக்காட்டான், 'பட்'டென்று 'உங்கள் வயது ஐம்பது' என்றானாம்! 'பரவாயில்லையே! எப்படி இவ்வளவு சரியாக வயதைச் சொல்லிவிட்டாய்?' என்று பட்டணத்தான் பட்டிக்காட்டானைப் பார்த்துக் கேட்க, 'எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனது வயது இருபத்தி ஐந்து. அவன் ஓர் அரைப் பைத்தியம். அதிலிருந்து கணக்குப் போட்டு நீங்கள் முழுப் பைத்தியமாக இருக்க வேண்டுமென்று நினைத்துத் தான் சொன்னேன், என்றானாம்" இந்தக் கதையை நான் சொல்லி முடித்ததும், "எதற்காகத் தம்பி இந்தக் கதையைச் சொன்னாய்?" என்றார் கவிராயர். நான் பதில் பேசாமல் எழுந்து சென்றேன்.

"தம்பி, தம்பீ! பதில் சொல்லி-விட்டுப்போ" என்றார் கவிராயர்.

"அந்தப் பட்டணத்தான் கேட்ட கேள்வியைப்போலத் தான் இருக்கிறது உங்கள் கவிதையும்!" என்று சொல்லிக் கொண்டே ஓடியே போய்விட்டேன்!

அற்புதங்கள்!



(தொடரும்)

முன் கதைச் சுருக்கம்

பல நாளாகக் குழந்தை இல்லாதிருந்த பல்லவ மன்னனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. பல்லவ நாடே களிப்பில் ஆழ்கிறது. அதே நாளில், அதே சமயத்தில் தலைநகரின் எல்லையில் ஒரு குடிசையில், ஒரு பிச்சைக்காரக் குடும்பத்தில் மற்றோர் ஆண் குழந்தை பிறக்கிறது. "ஏன் இக் குழந்தை பிறந்தது?" என்று அதன் பெற்றோர் வருந்துகின்றனர்!

பத்து வருஷங்கள் கழிகின்றன. பல்லவ சக்கரவர்த்தி நோய்வாய்ப்படுகிறார். ஒருநாள் அவர் தமது மகன் புனலாடனை அருகில் அழைத்து, அரசாங்க அதிகாரச் சின்னமான இறையாழியை அவனிடம் ஒப்படைக்கிறார். தமக்குப் பின் நாட்டை ஆளப்போகும் இளவரசனிடம் அரசாட்சிப் பொறுப்பைப் பற்றி உபதேசிக்கிறார்.

பிச்சைக்காரனாகப் பிறந்தும், மனத்திலே மன்னனாக வாழ்கிறான் பொன்னன். இரவெல்லாம் அரசபோகக் கனவுகள்; பகலெல்லாம் அரச வாழ்க்கைக் கற்பனைகள். அவன் தன் தந்தையிடம் படும் கஷ்டங்கள் தாளமுடியாமல் ஒருநாள் அதிகாலையில் வீட்டைவிட்டு வெளியேறுகிறான். நடந்து நடந்து சோர்ந்துபோய் அரண்மனை மதிற் சுவரின் கீழ் தங்கி விடுகிறான். அதற்காக, அரண்மனைக் காவலாளி பொன்னனை நன்கு உதைத்துத் தண்டிக்கிறான்.

தன் தந்தை விரைவில் இறந்துவிடப் போகிறாரே என்ற கவலையில் ஆழ்ந்திருந்த புனலாடனின் காதில், அரண்மனை வாயிலில் அடிவாங்கும் பொன்னனின் அலறல் விழுகிறது. இளவரசன் ஓடிச்சென்று பிச்சைக்காரச் சிறுவனைக் காப்பாற்றுகிறான். அவன் மேல் புனலாடனுக்கு ஒரு பற்று விழுகிறது. அவனை இளவரசன் தன் ஏகாந்த அறைக்கு இட்டுச் செல்கிறான். இருவரும் ஆனந்தமாக அரண்மனைக்குள் செல்லும்போது அரண்மனை வாயில் காவலாளியோ பொன்னன் மேலிருந்த கோபம் தணியாமல், ஆத்திரத்தோடு கருவிக் கொண்டிருக்கிறான்.

5. கன்னத்தில் ஓர் அறை!

புனலாடனும் பொன்னனும் சில நிமிஷ நேரத்தில் மிக நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர். பல வருஷ காலம் பழகியவர்களைப் போல அவர்கள் பழகினர்கள்.

இளவரசனின் ஏகாந்த அறையில் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தர்கள். பொன்னன் பசியால் களைத்திருப்பதைக் கண்ட புனலாடன், நிறையப் பழங்களைக் கொடுத்து அவனை உண்ணச் செய்தான்.

இளவரசனேடு பேசவே பொன்னனுக்குக் கூச்சமாயிருந்தது. அவன் அச்சத்தையும் கூச்சத்தையும் புனலாடன் தன் இனிய பேச்சால் போக்கினன்.

பொன்னனின் வாழ்க்கை முறையும் அனுபவங்களும் புனலாடனுக்குப் புதுமையாயிருந்தன. அவற்றைப் பற்றி நன்ருக அறிய வேண்டிப் புனலாடன் பல கேள்விகளைக் கேட்டான். பொன்னனின் பதில் ஒவ்வொன்றும் புனலாடனை ஆச்சரியப் படுத்தியது.

பொன்னன் தான் வாழும் இடத்தைப் பற்றிக் கூறினன்; தன் தாய் தந்தையரைப் பற்றிக் கூறினன்; தன் சகோதரிகளைப் பற்றிக் கூறினன்; தன் பாட்டியைப் பற்றியும் கூறினன்.

"உன் அப்பா எப்படி? உன் மேல் அவருக்கு ஆசைதானே?" என்று கேட்டான் மன்னன் மகன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? தினம் என்னைத் திட்டியபடி இருப்பார் அவர். நான் செய்வது எல்லாமே அவருக்குத் தப்பாகப் படும்"

"எல்லாத் தந்தைமாருமே அப்படித்தான் போலிருக்கிறது! என் அப்பாவுக்குக்கூட என் மேல் கோபம் வரும். ஆனல்,கோபத்தை வேறு யார் மேலாவதுதான் காட்டுவார்" என்று கூறிச் சிரித்தான் புனலாடன்.

"ஆனல் என் அப்பா என்னிடமே காட்டிவிடுவார்! அடித்து நொறுக்கி விடுகிருரே!" என்று வருத்தத்தோடு பொன்னன் கூறவும், புனலாடன் படபடப்போடு, "என்ன! உன்னை அடிப்பாரா! இரக்கமற்றவர்!" என்று கத்தினன்.

பொன்னன் ஒன்றும் பேசாமல் தன் மேலங்கியைத் திறந்து காட்டினன். இரவு உதை வாங்கிய தழும்புகள் மார்பிலும் முதுகிலும் தெளிவாகத் தெரிந்தன. புனலாடன் கண்களைப் பொத்திக் கொண்டான்.

"என் தந்தையிடம் கூறி அந்தக் கொடியவரை நன்ருகத் தண்டிக்கிறேன்" என்று புனலாடன் எழுந்த போது பொன்னன் அவனைத் தடுத்தான்.

"வேண்டாம் இளவரசே! என்ன இருந்தாலும் அவர் என் தந்தை அல்லவா?"

புனலாடன் தலையை அசைத்து, மறுபடி உட்கார்ந்தான். திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டு அவன், "பொன்ன, உன் அக்காமார்கூட வேலையாட்களைக் கொடுமையாக நடத்துவார்களா?" எனக் கேட்டான்.

பொன்னன் சிரித்தான். "இளவரசே, எங்கள் அக்காமாருக்கு வேலையாட்களே கிடையாதே!"

"என்ன! அப்படியானல், அவர்களுக்கு யார் உடை உடுத்துவார்கள்? மாலையில் யார் உடை கழற்றுவார்கள்?"...

"அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் உடைதானே இருக்கிறது!"

"என்ன! ஆளுக்கு ஒரே ஓர் உடைதான் இருக்கிறதா?"

"ஆமாம். அவாகளுக்கும் அப்படித்தான்! எனக்கும் அப்படித்தான். எங்களுச்கு இருப்பது ஓர் உடல் தானே! இரண்டு உடைகள் எதற்கு?"

புனலாடன் நகைத்தான். "பொன்னு, நீ நன்ருகப் பேசுகிருய். கவலைப்படாதே! என் தந்தையிடம் சொல்லி நாளைக்கே உங்கள் அனைவருக்கும் பட்டாடைகள் வழங்குகிறேன்"

பின்னர் அவர்கள் இருவரும் தாம் ஆடும் விளையாட்டுக்களைப் பற்றிப் பேசலாயினர். கோயில் பிரகாரங்களில் சுற்றுவதையும், ஆற்றிலும் குளத்திலும் கும்மாளம் போட்டு நீந்துவதையும், திருவிழா நாட்களில் ஊர் சுற்றுவதையும் பற்றிப் பொன்னன் பிரமாதமாக வர்ணித்தான். அவற்றைக் கேட்கக் கேட்க, புனலாடன் அந்தக் கவலையற்ற உல்லாச வாழ்க்கையின்மேல் தன்னை அறியாமலே மோகம் கொண்டுவிட்டான்.

"ஆகா! என்ன அற்புதமான வாழ்க்கை! எனக்கு உள்ள கட்டுப்பாடுகளை எண்ணிப் பார்க்கும்போது இந்த ராஜபோக வாழ்க்கையே பிடிக்கவில்லை. இதை இன்றே நான் கைவிடத் தயார்!" என்று உணர்ச்சியோடு கூவினன் புனலாடன்.

பொன்னனை உற்றுப் பார்த்தவாறேபேசிய புனலாடனுக்கு, பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது. பொன்னனிடம் "தம்பி பொன்னு, உன் உடைகளை எனக்குச் சிறிது நேரம் கொடேன். உன்னைப் போன்ற கவலையற்ற வாழ்வு வாழ நான் கொடுத்து வைக்காவிட்டாலும், சிறிது நேரமாவது அந்த உடையை உடுத்து மகிழுவேன்" என்று கெஞ்சிக் கேட்டான்.

"ஆகா, தருகிறேன்" என்ருன்

பொன்னன். அத்துடன், மிகவும் தயக்கத்துடன், "இளவரசே, எனக்கு நெடுநாளாக ஓர் ஆசை உண்டு. சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?" என்றான்.

"சொல், பயப்படாதே!"

"சிறிது நேரமாவது இளவரசர் உடையை நான் அணிய வேண்டும் என்று எனக்கு ஆசை!"

"பூ! இதற்கா தயக்கம்! இந்தா, இதோ கழற்றித் தருகிறேன்" என்று கூறியவாறே புனலாடன் தன் உடுப்பைக் களையலானான்.

* * *

அடுத்த அரை நாழிகைப் பொழுதில் அந்த அறையில் ஒரு பெரிய மாறுதல் நடந்திருந்தது. இல்லை, இல்லை, மாறுதல் நடந்தது என்றே சொல்ல முடியாதபடி இருந்தது அவர்கள் தோற்றம்!

"என்ன பொன்னு, என்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது?" என்று கேட்டு நகைத்தான் பிச்சைக்கார உடையிலிருந்த புனலாடன். அவன் பிச்சைக்கார உடைகளை அணிந்ததோடு மட்டுமல்ல; தன் தலையைத்தாறுமாறாகக் கலைத்துவிட்டிருந்தான்; முகத்தில் அங்கங்கே அழுக்கைத் தேய்த்து விட்டிருந்தான்.

ஆனால், பொன்னனுக்கோ தன் திறமையையெல்லாம் காட்டி உடுப்பு அணிவித்திருந்தான். பொன்னன் தலை ஒழுங்காகச் சீவப்பட்டிருந்தது. அவன் முகம் இப்போது நன்கு சுத்தம் செய்யப்பட்டுப் பிரகாசமாயிருந்தது. "மார்பை முன்னே தூக்கி நட!... அப்படி இல்லை; இப்படி" என்று புனலாடன் தன் நண்பனுக்குக் கம்பீர நடையைக் கற்றுக் கொடுத்தான்.

இருவரும் கண்ணாடி எதிரே நின்று பார்த்துக்கொண்டார்கள். புனலாடன் கண்ணாடியைப் பார்த்தான்; தன் அருகே இருந்த பொன்னனைப் பார்த்தான். மீண்டும் தன் உருவத்தைக் கண்ணாடியில் நோக்கினான். அவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. பொன்னன் பக்கம் திரும்பினான்.

அதே சமயம், பொன்னனும் அதே ஆச்சரியம் மிகுந்த விஷயத்தைக் கண்டு பிடித்துவிட்டான். அவனும் புனலாடன் பக்கம் திரும்பினான்.

"நம்ப முடியவில்லையே!" என்றான் புனலாடன். "பொன்னு! இது எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

"இளவரசே! அதைச் சொல்ல எனக்கு நா எழவில்லை. தாங்களே சொல்லுங்கள்" என்றான் பொன்னன்.

உண்மை என்னவென்றால், புனலாடனும் பொன்னனும் தங்கள் உருவ ஒற்றுமையைக் கண்டுதான் அவ்வளவு வியப்படைந்தார்கள். இருவரும் ஒரே உயரம்; ஒரே அளவு பருமன்; கண்களிலும் தலைச் சுருளிலும் வித்தியாசமே இல்லை. அரை நாழிகைக்கு முன்பு இருந்த இளவரசன் வேறு; இப்போது இளவரசர் உடையிலிருந்த பொன்னன் வேறு என்று யாராலும் சொல்லமுடியாது! அரை நாழிகைக்கு முன் இருந்த பொன்னன் வேறு; இப்போது பிச்சைக்கார உடையிலிருந்த புனலாடன் வேறு என்று யாரும் கூற மாட்டார்கள்.

"நம்மை இந்த நிலையில் யாராவது கண்டால்கூட இந்த வித்தியாசத்தை உணரவே மாட்டார்கள்" என்று கூறினான் புனலாடன்.

"வா, அந்தமஞ்சத்தில் உட்கார்ந்தபடி பேசலாம்" என்று சொல்லியபடி பொன்னனின் கையைப் பிடித்து இழுத்தான் புனலாடன்.

"ஐயோ!" என்று அலறினான் பொன்னன். "அந்த இடத்தைப் பிடிக்காதீர்கள். அங்கே நன்றாக

★ யோசித்துப் பார்க்காமல் பேசுவது, குறி பார்க்காமல் சுடுவதைப் போன்றது.

★ விற்கிறவனுக்கு ஒரே கண்; ஆனால், வாங்குகிறவனுக்கு நூறு கண்கள்!

★ சிந்திக்கத் தெரியாத மனிதனும், சிரிக்கத் தெரியாத மனிதனும், பிழைக்கத் தெரியாத மனிதனாவான்!

★ ஆயிரம் மைல் பிரயாணமானாலும் முதலில் ஓர் அடி எடுத்து வைத்துத் தான் ஆரம்பிக்கவேண்டும்.

அடித்து விட்டான் உங்கள் காவலாளி" என்று கூறிய வண்ணம் அங்கியை விலக்கி, கையில் வாங்கிய அடியின் வடுவைக் காட்டினான்.

அரண்மனை வாயிலில் பொன்னனைக் காவலாளி அடித்தது புனலாடனுக்கு நினைவு வந்தது. "மூடன்! எப்படி அடித்து விட்டான்! அவனை என்ன செய்கிறேன் பார்!" என்று கோபத்துடன் அறைக் கதவை நோக்கி வேகமாக நடந்தான் புனலாடன்.

அப்போது மஞ்சத்தின் மேல் இருந்த இறையாழியும், பேழையும் அவன் கண்களில் பட்டன. இறையாழியைக் கையில் எடுத்தான். அதைப் பத்திரமாக வைக்க ஓர் இடத்தைத் தேடினான். நல்ல இடம் கிடைக்கவில்லை. அருகே இருந்த குத்து விளக்கை நகர்த்தி அதன் பீடத்தடியில் அதை வைத்தான். "இதோ இங்கேயே இரு. சீக்கிரம் வந்துவிடுகிறேன்" என்று கூறி விட்டு, தன் நண்பனைத் தாக்கிய காவலாளியைத் தண்டிக்க வேகமாக ஓடினான் புனலாடன்.

இளவரசன் உடையிலிருந்த பொன்னன் புனலாடன் போவதைப் பார்த்தபடி நின்றான்.

* * *

அரண்மனை வாயில் காவலாளி அப்படியும் இப்படியுமாக உலவி வந்தான். யாரோ ஓடி வரும் ஓசை கேட்டு அவன் திரும்பினான்.

பிச்சைக்காரச் சிறுவனே அரண்மனைக் குள்ளிருந்து வருவதாக நினைத்தான் "வந்தாயா, வா தம்பி, காலையில் கொடுத்தது போதாது. இன்னும் தருகிறேன், வா" என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

அவன் அருகே வந்ததும், புனலாடன் ஏதோ பேச வாயெடுத்தான். ஆனால், காவலாளி அவன் கன்னத்தைக் குறிபார்த்து ஓங்கி ஓர் அறை விட்டான்.

இளவரசன் சுருண்டு விழுந்தான். அவனைத் தூக்கி நிறுத்தி, மற்றோர் அறை விட்டான் காவலாளி.

புனலாடனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன! நான் யார் தெரியவில்லையா உனக்கு; இளவரசனை அடிக்க உனக்கு எவ்வளவு துணிச்சல்!" என்று கேட்டான் அவன்.

காவலாளி நகைத்தான். "சீச்சீ, பிச்சைக்கார நாயே! காலையில் என்னிடம் வாங்கிய உதை நினைவில் இல்லையோ! இளவரசரோடு இரண்டு நாழிகை இருந்துவிட்டதால் நீயே இளவரசன் என்று மனத்தில் நினைத்துக் கொண்டு விட்டாயோ!" என்று கேட்டுவிட்டுப் பின்னும் நகைத்தான். "என் கண்முன் நின்றால் இன்னும் உதை விழும். போ" என்று சொல்லி, புனலாடனின் கழுத்தைப் பிடித்து வெளியே வேகமாக ஒரு தள்ளுத் தள்ளினான்.

புனலாடன் உருண்டு போய் மழைச் சேற்றிலே விழுந்தான். பாவம்!

(தொடரும்)

ஆயிரங் காலத்துப் பகை

நீலக் கடல் நடுவிலே, ஒரு மலைத் தீவு. அத் தீவில் எங்கே பார்த்தாலும், எப்படிப் பார்த்தாலும் மலைகள்! மலைகள்! மலைகள்!...

பயங்கரமான அந்த மலைத்தீவு, ஆரவல்லி மலைகள்—சூரவல்லி மலைகள் என இரு பாகங்களாகப் பிரிந்திருந்தது. அங்கே, சூரியன் எட்டிப்பார்த்ததில்லை; சந்திரன் தலைகாட்டியது இடையாது; ஆனால்—என்றாவது ஒருநாள், அபூர்வமாக, ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் லேசாகக் கண் சிமிட்டுவதுண்டு. அங்கு, யுகம் யுகமாய் வாழ்ந்து வரும் காட்டு மிராண்டிகளுக்கு, பனியைத் தவிர—மழையைத் தவிர—மந்தாரப் பொழுதைத் தவிர—வெய்யிலையும், இருளையும் தெரியவே தெரியாது!

* * *

அன்று ஒரு நாள்—

ஆரவல்லி மலைகளின் சரிவிலே, பிரும்மாண்டமான ஒரு செம்பாறை. அதன்மீது, காட்டு மிராண்டிச் சிறுவன் பகாரியும், அவன் தங்கை சவியும் அமர்ந்து ஏதோ கதை பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அஹோ, அஹோ...! பகாரீ ...சவீ...அஹோ...அஹோ...!" இந்தக் குரலைக் கேட்டதும், பகாரியும், சவியும் திடுக்கிட்டார்கள்; துள்ளிக் குதித்து எழுந்தார்கள்; சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

தெற்கே, சற்றுத் தொலைவில் ஒரு மலைப் பொந்தில் நின்று கூவியபடி, கைகளை ஆட்டிச் சைகை காட்டினான், பஹூ. அவன் பகாரியின் தோழன். அவன் கூனன்; உடல் சிறியது; தலை பெரியது. மொத்தத்தில் அவன் விகாரமாயிருந்தான். பார்க்கப் பயங்கரமாயிருந்தான். அவன் காட்டிய அபாயச் சைகையைக் கண்டதும், பகாரியும் சவியும் தாவிக் குதித்து ஓடினார்கள். அருகிலிருந்த மலை உச்சிக்குச் சென்றார்கள். அங்கே யாதா கோயில் கோபுரம்போல் ஒரு நீண்ட பாறையிருந்தது. அந்தப் பாறைக்கும், தூரத்தில் பஹூ நின்றிருக்கும் மலையிலுள்ள சற்றுத் தணிவான பாறைக்கும் இடையே ஓர் உறுதியான கொடிக் கயிறு கட்டப்பட்டிருந்தது. கயிற்றுக்குள் ஓரடி நீளமுள்ள வழவழப்பான மூங்கில் குழாய் ஒன்று செருகப்பட்டிருந்தது. அந்தக் குழாய், கயிற்றில் வழுக்கிச் சென்றுவிடாமல் இருக்க, ஒரு சிறு கயிற்றால், கொடிக்கயிற்றின் முனையில் கட்டி வைக்கப்பட்டிருந்தது. அச்சிறு கயிற்றைப் பல்லால் கடித்து அவிழ்த்துவிட்டு, அதைப்பிடித்துக்கொண்டான் பகாரி. இன்னொரு கையால் சவியைத் தூக்கித் தோளிலே போட்டு அணைத்துக்கொண்டான். மறு நிமிஷம்; அவன் பிடித்திருந்த மூங்கில் குழாய் கயிற்றின் இப்பக்கத்திலிருந்து அப்பக்கத்தை நோக்கி நழுவி ஓடியது. பகாரி அதைப் பிடித்துக்கொண்டிருந்ததால், அவனும் சவியும் இந்தப் பாறையிலிருந்து பஹூ நிற்கும் அந்த எதிர்ப் பாறையை நோக்கி 'விர்'

தங்கமணி

றென்று சென்றனர்.

பஹூ நின்றிருந்த மலையை அடைந்ததும் சவியைக் கீழே இறக்கிவிட்டான் பகாரி. உடனே, அவள் பஹூவின் அருகே ஓடி, "பஹூ...! என்ன சேதி?" என்று கேட்டாள். 'சத்தம் போடாதே!' என்ற அர்த்தத்தில் சைகை காட்டிவிட்டு, அங்கிருந்த மலை இடுக்குகளின் வழியே சந்தடியின்றிச் சென்றான், பஹூ. அவனைப் பின்பற்றி, பகாரியும் சவியும் மௌனமாகச் சென்றார்கள்.

அரை நாழிகை ஆயிற்று. சூரவல்லி மலைகளுக்குச் சமீபமாக, பச்சைப் பாறைக் குன்று இருந்தது. பஹூ, பகாரி, சவி மூவரும் அங்கே வந்தார்கள்.

"பகாரி...அதோ...அங்கே பார்..." பஹூ சுட்டிக் காட்டிய பாறை இடுக்கில், ஒரு காட்டு மிராண்டி பதுங்கியிருந்தான்.

"பஹூ! நீ அப்படி வா. நான் இப்படி வருகிறேன். சவி, நீ இங்கேயே இரு..." என்று கூறிவிட்டு, பாறைகளின் அடியில் பதுங்கிப் பதுங்கிச் சென்றான், பகாரி. பஹூ, அந்தப் பக்கமாக ஒளிந்து ஒளிந்து சென்றான்.

சில விநாடிகளாயின.

அந்தக் காட்டுமிராண்டி பதுங்கிக்கொண்டிருந்த இடத்திற்கு பகாரியும், பஹூவும் வந்தார்கள்; பார்த்தார்கள். திகைரென்றது அவர்களுக்கு! ஏன்...?

காட்டுமிராண்டி மனிதனைக் காணோம்!

திடீரென்று அப்போது ஓர் அலறல்:

"ஆ! அண்ணா...! பஹூ...! ஐயோ...!"

பகாரியும், பஹூவும் குலுங்கித் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்திலே, ஆரவல்லி மலைகளிலிருந்து சூரவல்லி மலைகளுக்குச் செல்லும் கொடிக் கயிற்றில், சவியைத் தூக்கிக் கொண்டு வழுக்கிச் சென்று கொண்டிருந்தான், அந்தச் சூரவல்லி மலைக் காட்டுமிராண்டி!

உடனே, பகாரியும் பஹூவும் இடையிலிருந்த கொம்புச் சங்குகளை எடுத்து 'பூம்...புர்ர்... ரும்ம்...' என்று ஊதினார்கள். அவர்களின் அபாயச் சங்கொலி ஆரவல்லி மலைகளில் எங்கும் எதிரொலித்தது.

* * *

ஆரவல்லி மலைகளில் வாழும் காட்டு மிராண்டிகளுக்கும், சூரவல்லி மலைகளில் வாழும் காட்டு மிராண்டிகளுக்கும் பகை. குடும்பம் குடும்பமாகப் பகை. பரம்

"ஏனப்பா, உங்க எஜமான் இருக்காரா? அவராலே எனக்கொரு காரியம் ஆகணும். அவர் யார் சொன்னால் கேட்பார்?"

"சின்ன எஜமான் சொன்னால் கேட்பார்"

"அடே அப்படியா! அப்போ நான் சின்ன எஜமானைப் பார்க்க முடியுமா?"

"ஹூம்! அவருக்கு மூணு வயசுங்க. தொட்டிலிலே தூங்குறாரு..."

பகை பரம்பரையாகப் பகை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பகை! இந்த ஆயிரங் காலத்துப் பகைக்குக் காரணம், அவர்களுக்கும் தெரியாது; இவர்களுக்கும் தெரியாது!

* * *

ஆரவல்லி மலைக் காட்டுமிராண்டிகளுக்கு இரத்தம் கொதித்தது. அவர்களின் முடிசூடாச் சக்கரவர்த்தியான பகாரியின் அப்பாவுக்குக் கோபம் குமுறியது! அதே சமயத்தில் தன் ஆருயிர் மகளை நினைத்த போது, துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

குகையில் கொஞ்ச நாழிகை அமைதி.

காட்டுமிராண்டித் தலைவர், கூட்டத்தைப் பார்த்து என்னவோ சொல்ல, உட்கார்ந்திருந்த வெண்பாறையை விட்டு மெல்ல எழுந்தார். மறு விநாடி—

“வந்தனம்! வந்தனம்!” இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கியவாறு கத்திக்கொண்டே அங்கே ஓடோடி வந்தான், ஒரு காட்டுமிராண்டி. அவன் சூரவல்லி மலைக் கூட்டத்தான்!

வந்தவன் வணக்கத்துடன் தலைவரிடம் சென்று, தான் கொண்டு வந்த தோல் சுருளைக் கொடுத்துவிட்டு மறு விநாடியே வந்தவழியே ஓடோடிப்போனான்.

தோல் சுருளைப் பிரித்து அதில் எழுதியிருந்ததைப் பரபரப்புடன் உரக்கப் படித்தார் தலைவர்.

அதில், “நீங்கள் எங்களுக்கு அடிமை ஆகவேண்டும். இல்லையானால்... உங்கள் இளந் தலைவி சவி, எங்கள் குல நீலிக்குப் பலி கொடுக்கப்படுவாள். இப்படிக்கு—சூரவல்லி மலைத் தலைவன்” என்றிருந்தது.

மறு கணம்—

“ஆ! அப்படியா! சரி, இன்று ஏழாவது ஜாமத்திற்கு நாம் கிளம்புவோம். சூரவல்லி மலைக் கூட்டத்தைத் தூள் தூளாக்குவோம்! எல்லோரும் தயாராயிருங்கள்”—இடையிலிருந்த சூலத்தை எடுத்துத் தலைக்கு மேல் பிடித்துக்கொண்டு ஆக்ரோஷமாக் கூவினர் தலைவர்.

* * *

வெகு நேரமாயிற்று. ஆறுவது ஜாமம் முடிந்துகொண்டிருந்தது.

சூரவல்லி மலைகளுக்கும், ஆரவல்லி மலைகளுக்கும் நடுவில் ஒரு பெரிய ஜீவநதி. அந்த நதிக்கு அருகில், மலைச் சாரலில் உள்ள ஒரு சொரிப் பாறையில் அமர்ந்து சூலத்தைக் கூர்மைப்

படுத்திக் கொண்டிருந்தான், பகாரி. அவன் சிந்தனையெல்லாம் சூரவல்லி மலைக் கூட்டத்தாரிடம சிக்கிக் கொண்டுள்ள சவியிடமே லயித்துக் கிடந்தது. அவனுக்கருகில் இன்னொரு பாறையில் அமர்ந்து, ஈட்டியைத் தீட்டிக் கொண்டிருந்தான், கூனன் பஹூ.

'சலக், சலக்'—ஒரு சப்தம்.

பகாரியும், பஹூவும் பதைத்துத் திரும்பி நதிப் பக்கமாகப் பார்த்தார்கள். ஜீவநதியை வெகு சாமர்த்தியமாக நீந்திக் கடந்து, கரையிலே தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தான், காட்டுமிராண்டிச் சிறுவன், ஆரி. அவன், சூரவல்லி மலைத் தலைவரின் ஒரே மகன்!

நீந்தி வந்த களைப்பு, ஆரியைத் தள்ளாட வைத்தது. மேலும் கீழும் மூச்சு முட்டியது. அவன் பகாரியை அன்புடன் பார்த்துக் கூறினான்: "தோழா! சவியைக் காப்பாற்றவே வந்தேன். இது சத்தியம்! சத்தியம்!..." என்று கத்தினான்.

"எப்படிக் காப்பாற்ற முடியும்?" என்று உணர்ச்சியுடன் கேட்டான், பகாரி.

"உங்கள் எல்லைச் சூலிக்கு என்னைப் பலி கொடுப்பதாக என் பிதாவுக்குச் செய்தி அனுப்புங்கள்...என் பிதா நான் பலியாகச் சகிக்கமாட்டார். அதனால் சவியும் இறக்கமாட்டாள். நமக்குள்ளே இருக்கும் ஆயிரங் காலத்துப் பகையும் அழியும்! அழியும்!..." என்று கூவினான், ஆரி. உடனே—

'அடடா, ஆரி! அதற்காகவா வந்தாய்?"—பெருத்த மகிழ்ச்சி நிறைந்த ஆரவாரம் அருகிலிருந்த குகையிலிருந்து கேட்டது. பகாரி, பஹூ, ஆரி மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். ஆரியின் அருமையான யோசனையைப் பதுங்கிக் கேட்டுக் கொண்டிருந்த பகாரியின் அப்பாவும் சிலரும் அவர்களிடம் சிரித்துக்கொண்டே வந்தார்கள். பகாரியின் அப்பா, ஆரியைக் கட்டி அணைத்துக் கொண்டு மகிழ்ந்தார். பிறகு—

சில நாழிகைக்குள்—சூரவல்லி மலைத் தலைவரான ஆரியின் அப்பாவுக்கு, ஆரியின் யோசனைப்படி செய்தி எழுதி அனுப்பினார்கள்.

"உங்கள் இளந்தலைவன் ஆரி, எங்கள் எல்லைச் சூலிக்குப் பலி கொடுக்கப்படுவான். இப்படிக்கு

—ஆரவல்லி மலைத் தலைவன்"

இச்செய்தியைக் கேட்டதும், ஆரியின் அப்பாவுக்கு உயிர் குலுங்கியது! உடனே, சமா தானத்திற்கு அடையாளமான வெள்ளைக் கரடித் தோல்களைத் தூக்கிக்கொண்டு, சவியுடன்—தன் கூட்டத்துடன்—ஆரவல்லி மலைக்குக் கிளம்பிவிட்டார்.

பிறகு—ஆரியின் அன்பான யோசனையால் அவர்களுக்குள் நிலவிவந்த ஆயிரங் காலத்துப் பகை, ஜீவநதிக் கரையிலே அழிந்தது! மலைத் தீவில் என்றும் கருணை மங்களம் தங்கியது! எல்லோர் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கியது!

—o—

இதோ பதில்

'அகஸ்தியர்'

● குறுக்கெழுத்துப் போட்டியில் திடீரென்று உங்களுக்கு லட்ச ரூபாய் விழுந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

—கே. வி. ராமசேஷன், மதுரை.

என் கையிலே அந்த லட்ச ரூபாயும் வந்து சேரும்வரை கண்களை மூடியபடி கனவு கண்டு கொண்டே இருப்பேன்.

● துதிக்கை இல்லாத யானை எப்படி உணவு உட்கொள்ளும்?

—P. கேசவன், சென்னை-2

அது உயிருடன் இருந்தால் அல்லவா உணவைப் பற்றிக் கவலைப் படவேண்டும்!

● உங்களுக்குப் பிடித்த படம் எது?

—சேது மாதவன், திருச்சி

ஒட்டுப் படம்!

● தெருவிலே அரை ரூபாய்க்கும், முக்கால் ரூபாய்க்கும் விற்கும் நீலக்கண்ணாடி, கறுப்புக் கண்ணாடிகளை வாங்கிச் சிலர் போட்டுக் கொள்கிறார்களே, இதனால் கண்ணுக்குக் கெடுதல் இல்லையா?

—K. சாம்பசிவன், குளித்தலை

கண்ணுக்குக் கேடு இல்லை; பணத்துக்குத் தான் கேடு!

● பெண் புத்தி பின்புத்தி என்கிறார்களே, நிஜமாகவா?

—த. பரமானந்தன், கோவில் பட்டி

நிஜமென்று தான் கூறுகிறார்கள், பின்புத்திக்காரர்கள்!

● கரடி ஆகாரமில்லாமலே குளிர்காலம் முழுவதும் இருக்குமெனச் சென்ற இதழில் படித்தேன். கரடியைக் காட்டிலும் அதிக நாள் பட்டினிகிடக்கக் கூடிய பிராணி இருக்கிறதா?

—ச. வேதவல்லி, கடலூர்

நத்தையால் அதிக நாள் இருக்கமுடியும் என்று கூறுகிறார்கள். எகிப்திலுள்ள பாலைவனத்திலிருந்து ஒரு நத்தையைக் கொண்டுவந்து, 'பிரிட்டிஷ் மியூஸி'யத்தில் ஒரு மேஜையில் வைத்தார்களாம். எப்போது? 1846-ஆம் வருஷம் மார்ச் மாதம் 25-ஆம் தேதி. அது அங்கேயே ஆகாரமில்லாமல் 1850-ம் வருஷம் மார்ச் மாதம் 7-ஆம் தேதி வரை இருந்ததாம், உயிருடன்!

● சென்னை மாநகரிலே பூனைகள் எங்கு பார்த்தாலும் திரிகின்றன. இது எதனால்?

—நா. பெரியசாமி, சென்னை-4

பதுங்கி வாழ இடமில்லாததால்தான்! பூனை வசிக்க வேண்டிய இடத்திலெல்லாமே மனி

> நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அழகாக, ஹாஸ்யமாக, பொருத்தமாகப் பதிலளிக்கின்றார் ஸ்ரீமான் அகஸ்தியர். சென்னையிலுள்ளவர்கள் அரையணாக் கார்டிலும், வெளியூரிலுள்ளவர்கள் முக்காலணாக் கார்டிலும் கேள்விகளை எழுதி அனுப்பலாம்.
>
> —ஆசிரியர்

பழம் பறந்தது!

பூந்தோட்டத்திலுள்ள நாவல் மரத்தடிக்குத் துள்ளியோடி வந்தாள் அல்லி; சுற்றுமுற்றும் பார்த்தாள். அருகில், கீழே ஒரே...ஒரு நாவல் பழம் மட்டும் விழுந்து கிடந்தது.

பளபளவென்று கன்னம் கரிய பெரிய அழகான பழம்!

அல்லி தாவியோடினாள்; அந்தப் பழத்தை ஆவலோடு எடுத்தாள்; ஆசையோடு வாயில் போட்டாள். மறு கணம்—

ஆஹா! என்ன அதிசயம்!...

அந்த அழகான பழம் திடீரென்று சுழன்றடித்துக்கொண்டு பறந்தோடி விட்டது! அல்லி ஏமாந்து, திகைத்து நின்றாள்; "என்னை ஏய்த்துவிட்டதே, இந்தத் தேன்குடித்த கருவண்டு!...' என்று அதிசயித்தில் மூழ்கினாள்.

தர்கள் வசிக்க ஆரம்பித்துவிட்டார்களே!

● மான், ஆடு—இந்த இரண்டுக்கும் குணத்திலே வேறுபாடு உண்டா?

—C. தருமன், ஆத்தூர்

நிறைய உண்டு. மிகவும் ஆச்சரியமான ஒரு வேறுபாடு என்ன தெரியுமா? தன்னைக் கொன்று தின்னும் சிங்கம் தூரத்தில் வருவது தெரிந்தாலே ஓடி ஒளிந்து கொள்ளும் மான். ஆனால், தன்னைக் கொன்று தின்னும் மனிதனை நேருக்கு நேரே கண்டும், அருகிலே அஞ்சாமல் நிற்கும் ஆடு!

● அறிஞர் என்று யாரைக் கூறலாம்?

—கே. பீமராவ், கோவை

மக்களின் வாழ்க்கைக்கு உதவும் சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறுகிறவரே அறிஞர்.

● படங்கள் இல்லாத சிறுவர் புத்தகம் எப்படி இருக்கும்?

—வி. ரமணி, கரூர்

மலர்களில்லாத சோலைபோல், நிலவு இல்லாத இரவுபோல், பணம் இல்லாத 'பர்ஸ்'போல்—அடடா, இவ்வளவு எதற்கு? கவர்ச்சியாக இராது என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாமே!

● வன மகோத்ஸவத்தைப் பற்றி உங்களது அபிப்பிராயம்—?

—பெ. சாமிநாதன், பெரியகுளம்

'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்கிறார்கள். ஆனால், இப்போது பலர் மரம் மட்டுமே வைக்கிறார்கள்; தண்ணீர் ஊற்ற நேரம் இருப்பதில்லை!

● தற்புகழ்ச்சிக் காரரைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

—C. ராமச்சந்திரன், சென்னை-5

'பாவம், இவரைப் புகழ வேறு எவருமே இல்லைபோலிருக்கிறது' என்று நினைத்து அனுதாபப் படுவேன்.

● மரம், செடி கொடிகளெல்லாம் பச்சையாகவே இருக்கின்றன. இதற்கு என்ன காரணம்?

—ரா. கோபாலன், விழுப்புரம்

மரம், செடி, கொடிகளெல்லாம் கரியமல வாயுவை உட்கொள்ளுகின்றன என்பது உனக்குத்

தெரிந்ததே. பச்சை நிறத்தை உண்டாக்கக்கூடிய சக்தி அந்த வாயுவுக்கு உண்டு. அதனல் தான் பசுமை தெரிகிறது.

● இப்போது 'சர்வ வியாபி யாயுள்ள ஒற்றை-இரட்டை பரிசுப் போட்டியில் கலந்து கொண்டால் மூளை விருத்தியாகுமாமே! உண்மையாகவா?

—D. மணி, சென்னை-1

அடே, அப்படியா! உடனே அப்படிச் சொன்னவர் மூளையைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டியதுதான்!

● சில பிராணிகளால் ஒரு இடத்தில் வசிக்க முடிகிறது. ஆனல், மற்ருெரு இடத்தில் வசிக்க முடியவில்லை. ஆனல், எல்லா இடங்களிலும் வசிக்க முடிந்த பிராணி எது?

—ம. ரேணுகா, திருத்தணி

மனிதன்தான்!

● சென்னை மந்திரி சபையில் ஒரு பெண்கூட மந்திரியாக இல்லையே!

—சோம. சீதை, காரைக்குடி

மந்திரியாக இல்லையே தவிர மந்திரிகளின் மனைவிகளாகவாவது இருக்கிருர்களே, அது போதாதா?

● குரங்குகளில் பெரிய குரங்கு எது?

—வி. எஸ். கோபாலன், ராஜமந்திரி

கொரில்லா என்ற குரங்குதான்! அதன் உயரம் ஆறடி இருக்கும். எடை கிட்டத்தட்ட 400 பவுண்டு இருக்கும். ஆப்பிரிக்கக் காடுகளில்தான் அதைக் காணலாம்.

● இங்கிலாந்தில் ஆரஞ்சு பயிராகாது என்று கூறுகிருர்களே, இது சரியா?

—S. சோமசுந்தரம், நெல்லிக்குப்பம்

ஆம், ஆரஞ்சு மரத்திற்குக் கொஞ்சம் அதிகமான உஷ்ணம் வேண்டும். அதை இங்கிலாந்தில் எதிர் பார்க்க முடியாது.

பச்சை குத்துதல்

பச்சை குத்தலையா—அம்மே
பச்சை குத்தலையா

என்று கேட்டுக்கொண்டே தெருவில் போகிருள் குறத்தி. சிலர் அவளிடம் பச்சை குத்திக் கொள்கிருர்கள், இந்தப் பச்சை குத்தும் வழக்கம் நம் நாட்டில் மட்டும்தான் உண்டு என்று நினைத்துவிடாதீர்கள்! உலகத்தின் பல பாகங்களிலும் இந்த வழக்கம் இருக்கிறது.

அராபியாவில் குழந்தைகளுக்கு அடையாளமாகப் பச்சை குத்துகிருர்கள். ஆஸ்திரேலியாவில் சில ஜாதியினர் தங்கள் குடும்ப அடையாளங்களைத் தொடையில் எழுதிக் கொள்கிருர்கள். கிரேக்க நாட்டில் உயர்ந்த குடும்பப் பெண்கள் பச்சை குத்திக் கொள்வதை கௌரவமாக நினைக்கிருர்கள். பட்டாளத்திலுள்ள ஆங்கிலேயர்கள் தங்கள் பெயர் அல்லது படையில் தங்களுக்குரிய எண்ணைக் கையிலே குத்திக் கொள்கிருர்கள். எஸ்கிமோ ஜாதியினரும் பீஜித்தீவிலுள்ள மக்களும் பச்சை குத்திக் கொண்டால்தான் மோட்சம் கிடைக்கும் என்று நம்புகிருர்கள்!

முன்கதைச் சுருக்கம்

தன் திருட்டுத்தனத்தை அறிந்த தந்தையின் கோபம் தணியும் வரை தலை மறைவாயிருக்க எண்ணி, வனஜாவின் ஜிமிக்கியோடும், அவளறியாமல் எடுத்துக் கொண்ட வெள்ளி டம்ளரோடும் மின்னலூர்க் கோயிலில் போய்த் தங்குகிறான், ரமணி. திருடன் ராக்கப்பனிடம் ஜிமிக்கியையும், டம்ளரையும் பறிகொடுத்து விட்டு, அவன் தவறுதலாகப் போட்டுச் சென்ற மணிபர்ஸுடன் புதுக் குளத்துக்குக் கிளம்புகிறான். வழியில் ஒரு பகல்திருடனிடம் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்த சமயம் குண்டு வெடிக்கிறது!...

இடையில், ராக்கப்பன் திருடிச் சென்ற ஜிமிக்கியை, தாயின் நோயைத் தீர்ப்பதற்காக விற்கச் சென்ற ராக்கப்பன் மகன் சாமியப்பன் போலீஸாரிடம் அகப்பட்டு ஸ்டேஷனுக்கு அழைத்து வரப்படுகிறான். ராக்கப்பனும் போலீஸாரிடம் சிக்கி இழுத்துவரப்படுகிறான். அங்கு வந்த வனஜாவின் அப்பா ராமசாமி ராக்கப்பனைக் கண்டு மயக்கமுறுகிறார். ராக்கப்பன் தனது பெரியப்பாதான் என்பதை அம்மா விசாலம் மூலம் அறிந்த வனஜா வியப்பில் மூழ்குகிறாள்.

அப்புறம்—

'டுமீல்' என்று துப்பாக்கிச் சத்தத்தைக் கிளப்பி, அந்த முரடனிடமிருந்து ரமணியைக் காப்பாற்றுகிறார், அகஸ்மாத்தாக அங்கு வந்த இன்ஸ்பெக்டர். ரமணி, அவரிடம் பர்ஸ் விஷயத்தையும் அந்த முரடனின் திடீர் எதிர்ப்பையும் விவரமாகச் சொல்கிறான். இன்ஸ்பெக்டர் முரடனை ஸ்டேஷனுக்கு அனுப்பி விட்டு ரமணியுடன், பர்ஸுக்குச் சொந்தக்காரரான கிறிஸ்தாபரிடம் செல்கிறார். போகும் வழியில், அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், 'அப்பா இல்லை. அம்மா இல்லை. மாமா வீட்டில்தான் இருக்கிறேன். மாமா மிகக் கொடியவர்' என்றெல்லாம் புளுகி உண்மை வரலாற்றை மறைத்துவிடுகிறான், ரமணி.

கொஞ்ச நேரத்தில், இருவரும் சர்க்கஸ் கூடாரத்தை அடைகிறார்கள்; கிறிஸ்தாபரைச் சந்திக்கிறார்கள். இன்ஸ்பெக்டர், 'காணாமல்போன உங்கள் பர்ஸைக் காப்பாற்றிக்கொண்டு வந்தவன்' என்ற பெருமையுடன் ரமணியைக் கிறிஸ்தாபரிடம் அறிமுகப்படுத்தி வைக்கிறார். கிறிஸ்தாபர் ரமணியைப் பாராட்டுகிறார்; அவனைத் தற்காலிகமாகத் தம்முடனே வைத்துக்கொள்ளச் சம்மதிக்கிறார்.

அன்றுமாலை, சர்க்கஸ் நடக்கிறது. கம்பி அறைக்குள்ளே, சிங்கத்தின் வாய்க்குள் கிறிஸ்தாபர் தலையை விடுகிறார். சிங்கம் அவர் தலையைக் கௌவிக்கொள்கிறது. விடுவிக்க வேண்டிய நேரம் கடந்தும், அப்படியே அது கௌவிக் கொண்டிருக்கிறது. இதைக்கண்டு சர்க்கஸ் சிப்பந்திகள் நடுங்குகிறார்கள். ஜனங்கள் பயந்து கூச்சலிடுகிறார்கள்.

இதற்கிடையில்—

16. வந்தவர் யார்?

தானும் வனஜாவும் பேசிக்கொண்டிருந்த அறையினுள் 'திடுதிப்' பென்று வந்து எதிரே நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டதும் விசாலத்தின் முகம் வெளுத்தது.

'வனஜா, இதோ பார்! மற்ற விஷயங்களெல்லாம் பிறத்தி யாருக்குத் தெரிந்தால்கூடப் பாதகமில்லை. அப்பா ராக்கப்பனைக் கிணற்றுக்குள் தூக்கிப்போட்டது மட்டும் யாருக்கும் தெரியவே கூடாது. போலீஸாருக்குத் தெரிந்தால் அப்பாவின்மேல் வழக்குப் பதிவு செய்துவிடுவார்கள். அதுவும் இன்ஸ்பெக்டர் வேறு இப் போது வந்துபோய்க்கொண்டிருக்கிறார்...' என்று விசாலம் சொல்லி முடிப்பதற்கும் இன்ஸ்பெக்டர் அறைக்குள் நுழைவதற்கும் சரியா யிருந்ததல்லவா? எனவே, தான் வனஜாவிடம் சொல்லிக்கொண் டிருந்ததையெல்லாம் இன்ஸ்பெக்டர் கட்டாயம் கேட்டிருக்க வேண்டும் என்றே விசாலம் எண்ணிப் பீதியடைந்தாள்.

"என்னைப்பற்றித்தான் பேச்சு நடக்கிறதுபோலிருக்கிறதே!" என்று உள்ளே நுழையும்போதே, இன்ஸ்பெக்டர் புன்னகையுடன் கேட்டார். இது வேறு சேர்ந்துகொள்ளவே, விசாலத்திற்கு நெஞ்சை அடைப்பது போலிருந்தது.

"ஒன்றுமில்லை, மாமா! 'அப்பாவுக்கு உடம்பு எப்படி இருக்கிற தென்று இன்ஸ்பெக்டர் கூட போனில் மூன்று தட்வை கேட்டு விட்டார்' என்று சொல்லிக்கொண்டிருந்தோம். நீங்களும் வந்து விட்டீர்கள்!" என்று சொன்ன வனஜா, "உங்களுக்கு ஆயுசு நூறு!" என்று முடித்துவிட்டுச் சிரித்தாள்.

"போனில் கேட்டது போதாதென்றுதான் நேரிலேயே வந் தேன். இப்போது எப்படி இருக்கிறார் அப்பா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அப்படியேதான் இருக்கிறார், மாமா! ஒரேயடியாய்க் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார். இப்போதுதான் கண்ணயர்ந்தார்" என்றாள், வனஜா.

"அப்பாவுக்கு உடம்பு சரியாகிவிடும்! கொஞ்சம் மூளைக் கொதிப்புத்தான். வேறொன்றுமில்லை. அம்மாவைக் கவலைப்படாமல் இருக்கச் சொல்!...அது சரி; அந்த ராக்கப்பனை உன் அப்பாவுக் குத் தெரியுமா? அப்படிக் கூச்சல் போட்டுக்கொண்டு மயங்கி விழுந்துவிட்டாரே!" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

வனஜா, "எனக்குத் தெரியாது, மாமா! அம்மாவைக் கேளுங் கள்!" என்று சொல்லித் தப்பித்துக்கொண்டாள்.

"உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள், அம்மா!" என்று கேட்டுக்கொண்ட இன்ஸ்பெக்டரிடம், அநேக ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கதையைச் சொன்னுள் விசாலம். ஆனல், ராக்கப்பனைப் பழிவாங்கும் நோக்கத்துடன், ராமசாமி அவனைத் தம்முடைய ஆட்களைக்கொண்டு கிணற்றில் தூக்கிப் போட்ட நிகழ்ச்சியை மாத்திரம் அவரிடம் விசாலம் தெரிவிக்கவில்லை.

"பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னல் அப்படி ஒரு கேஸ் நடந்ததுகூட எனக்குத் தெரியும். அந்த ராக்கப்பன்தானு இவன்? ஆமாம்; என்னவோ 'கிணறு...கொலை' என்று ராமசாமி கத்தினரே...?" என்று கேட்டார், இன்ஸ்பெக்டர்.

தன்னுடைய முகத்தோற்றத்தைச் சாமர்த்தியமாக மாற்றிக்கொண்ட விசாலம், "அதுவா? வேறென்றுமில்லை. ராக்கப்பன் முதலில் இவளுடைய தாத்தாவை விஷம் கொடுத்துக் கொன்று கிணற்றிலே தூக்கிப் போட்டுவிட வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தானும். அதை நினைத்துத்தான் அப்படிக் கூச்சல் போட்டிருப்பார்!" என்று பதில் சொன்னுள்.

"சரி, நான் வருகிறேன்! ஒன்றும் கவலைப்படாதிர்கள்?" என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்ருர் இன்ஸ்பெக்டர். இந்தச் சமயத்தில் ராமசாமியைப் படுக்கவைத்திருந்த அறையிலிருந்து கூச்சல் கிளம்பிற்று.



"தூக்கம் கலைந்து விழித்துக்கொண்டுவிட்டார் போல் இருக்கிறதே!" என்று முணுமுணுத்த இன்ஸ்பெக்டர், அந்த அறை ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தார். இன்ஸ்பெக்டருக்குப்பக்கத்தில் நின்றபடியே வனஜாவும் ஆவலும் கவலையும் கொண்ட உள்ளத்துடன் எட்டிப் பார்த்தாள்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்த ராமசாமி, "ஐயோ ரமணி! உன்னை அநியாயமாய் வீட்டைவிட்டு விரட்டி விட்டேனடா! நான் மகாப் பாவி! நான் அடிக்கப் போகிறேனே என்றபயத்தினல் தானே நீ ஓடிப்போனுய்?" என்று விக்கி விக்கி அழுது

கொண்டிருந்தார். வனஜாவின் கண்கள் 'பொல பொல' வென்று கண்ணீர்த் துளிகளை உதிர்த்தன.

"எப்படியாவது ரமணியைக் கண்டுபிடிக்க முயலுகிறேன். எங்கே போய்விடப் போகிறான்? எல்லாம் தன்னால் அகப்பட்டு விடுவான். வீணில் ஒருவரும் மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள்! உன் அம்மாவையும் கவலைப்படாமல் இருக்கச் சொல்! சரி, நான் வரட்டுமா?" என்று வனஜாவிடம் விடைபெற்றுச் சென்றார், இன்ஸ்பெக்டர்.

'ரமணி பாவம், டம்ளரையும் ஜிமிக்கியையும் இப்படித் திருடனிடம் பறிகொடுத்து விட்டானே! சாப்பாட்டுச் செலவுக்கு என்ன பண்ணுவான்? பட்டினி கிடக்கிறானோ, என்னவோ?' என்று எண்ணிக் கலங்கிய வனஜாவுக்குச் சோறே இறங்கவில்லை. இன்ஸ்பெக்டரிடம் சாமியப்பனைப்பற்றி விசாரிக்க மறந்துவிட்டது வனஜாவுக்குத் திடீரென்று நினைவு வந்தது. அம்மா சொன்ன விஷயங்களைக் கேட்டதிலிருந்து வனஜாவுக்கு, சாமியப்பன்மேல் அவளையும் அறியாமல் ஒரு பரிவு ஏற்பட்டுவிட்டது.

......வனஜா போலீஸ் நிலையத்துக்குச் சென்றபோது, இன்ஸ்பெக்டர் சாமியப்பனைக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்.

"வாம்மா, வனஜா! நீ வருவாயென்றுதானே நினைத்தேன்!" என்று இன்ஸ்பெக்டர் அவளை வரவேற்றார். வனஜா ஒரு பக்கமாக உட்கார்ந்தாள்.



சாமியப்பன், படுத்த படுக்கையாய்க் கிடக்கும் தன் அம்மாவுக்கு வைத்தியம் பார்க்கவே, ராக்கப்பன் கொண்டுவந்த அந்த ஜிமிக்கியை எடுத்து விற்கவந்ததாகச் சொன்னான். ராக்கப்பன் தங்கள் குடிசையில் ஒளித்து வைத்திருந்த மற்ற நகைகளின் இருப்பிடத்தையும் இன்ஸ்பெக்டருக்குக் காட்டுவதாக வாக்களித்தான். இன்ஸ்பெக்டர் அவனை விடுதலை செய்தார். செய்ததோடு மட்டுமல்ல—

தம்பி! எனக்கும் அம்மா ஒருகாலத்தில் இருந்

1992
சென்னை-600 008

திருக்கிருள். இந்தா! இந்த இருபது ரூபாயை வைத்துக்கொள். உன் அம்மாவின் உடம்பை நல்ல டாக்டர் யாரிடமாவது காட்டலாம். இப்போது வனஜா உன்னை அவள் வீட்டுக்கு அழைத்துப் போகிருளாம். அப்புறமாக, உன் வீட்டிலுள்ள மற்ற திருட்டு நகைகளை எல்லாம் எடுத்துக்கொண்டுவர உன்னுடன் இரு ஜவான்களை அனுப்புகிறேன்'' என்ருர் இன்ஸ்பெக்டர். வனஜா, சாமியப்பனை வாத்சல்யத்துடன் பார்த்தாள். அவன் ஒன்றும் விளங்காமல் விழித்தான்.

''வனஜா! அவனிடம் சொல்லேன், நீ எப்படி அவனுக்குத் தங்கை முறையாக வேண்டுமென்பதை!'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

...வீட்டை நோக்கி நடந்துகொண்டே சாமியப்பனிடம் எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாக விவரித்துச் சொன்னுள், வனஜா. சாமியப்பனுக்குத் தான் கனவுதான் காண்கிருேமோ என்ற சந்தேகம் உதித்தது.

தன் வீட்டில் அன்று பகல் சாப்பாட்டை முடித்துக்கொள்ள வேண்டுமென்று வனஜா சாமியப்பனை மிகவும் வற்புறுத்தினுள். தொடர்ந்து, ''உன்னுடைய அம்மா இதையெல்லாம் உனக்குச் சொன்னதில்லையா?'' என்று கேட்டாள்.

சாமியப்பன், ''சொன்னதே யில்லை. ஆமாம்...உன் அம்மா ஒன்றும் சொல்லமாட்டார்களா, நான் உன் வீட்டுக்கு வந்தால்?'' என்று கேட்டான்.

''சேச்சே! அதெல்லாம் ஒன்றுமே சொல்லமாட்டார்கள். அம்மாதான் உன்னைக் கூட்டிவரச் சொன்னுள். அது போகட்டும்; உன்னுடைய அம்மா நீ திடீரென்று காணுமற் போனதைப்பற்றிக் கவலைப்படமாட்டாளா? நோயாக வேறே இருப்பதாகச் சொன்ருய்! என் வீட்டில் சாப்பிடு. சாப்பிட்டதும் நேரே இன்ஸ்பெக்டர் அனுப்பும்கான்ஸ்டேபிள்களுடன் மின்னலூருக்குப்போவோம்...''

''போவோம் என்று பன்மையில் பேசுகிருயே! நீயும் வரப் போகிருயா, என்னுடன்?''

''ஏன், வரக்கூடாதா உங்கள் வீட்டுக்கு?''

''அதற்குச் சொல்லவில்லை வனஜா! உங்கள் அம்மா அனுமதிப்பார்களோ என்ற சந்தேகத்தால்தான் கேட்கிறேன்!''

''அம்மா ஒன்றும் சொல்லமாட்டாள்...மின்னலூருக்குப் போகிருேமா? போனதும் உன் அப்பா ஒளித்து வைத்திருக்கிற நகைகளை எல்லாம் போலீஸாரிடம் ஒப்படைப்போம். அப்புறம் உன்னுடைய அம்மாவை எங்கள் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருவோம்...வந்து, ஒரு நல்ல டாக்டராகப் பார்த்து அமர்த்தி வைத்தியம் பார்ப்போம்''

''என்னது!''

பெரிய மீன்

'ஆதவன்'

பள்ளிக்கூட மணி அடித்தது. "நீங்களெல்லோரும் படித்துக் கிழித்தது போதும். வீட்டுக்குப் போங்கள்" என்று கூறிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்தார் கணக்கு உபாத்தியாயர். அன்று அவர் கேட்டபடி தலைமை ஆசிரியர் 'லீவு' கொடுக்கவில்லையே என்ற ஆத்திரம் அவருக்கு!

பாலு, செல்வம், மாலதி மூவரும் பேசிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது பாலு, "டேய், நேற்று நம் கோயில் குளத்தில் எவ்வளவு பெரிய மீன் ஒன்று பிடித்தேன், தெரியுமா?" என்றான்.

"போடா, பெரிய பிரமாதமா? நான் கூடத்தான் பிடிப்பேன்" என்றான் செல்வம், அலட்சியமாக.

"சும்மா சொல்லாதே தம்பி. நான்பிடிப்பதைப் போல் உன்னால் மீன் பிடிக்க முடியாது. தெரியுமா?" என்றான் பாலு.

"சும்மா அளக்காதே! உன்னை விட நன்றாக எனக்கு மீன் பிடிக்கத் தெரியும்" என்றான் செல்வம்.

"சரி, நாளைக்கு லீவுதானே! ஊர்க் கோடியில் இருக்கிறதே, அந்த ஆற்றில் இருவரும் மீன் பிடிப்போம். ஒரு மணி நேரத்திற்குள் யார் மிகப் பெரிய மீனைப் பிடிக்கிறார்கள் பார்க்கலாம். எவ்வளவு பந்தயம் கட்டுகிறாய்?" என்று சவால் விட்டான் பாலு.

"இரண்டு ரூபாய்" என்றான் செல்வம், விட்டுக் கொடுக்காமல். அதற்குள் பாலுவின் வீடு நெருங்கி விட்டது. "சரிடா செல்வம். நாளைக் காலை எட்டு மணிக்கெல்லாம் ஆற்றங் கரைக்கு வந்து விடு" என்று கூறிவிட்டுப் போய் விட்டான் பாலு.

அவன் போனதும், "ஏண்டா, பெரிய 'சாம்பியன்' மாதிரி பந்தயம் கட்டிவிட்டாயே, நாளைக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று செல்வத்தைப் பார்த்துக் கேட்டாள் மாலதி.

"ஏன்?" என்றான் செல்வம்.

"ஏனா? மீன் பிடிப்பதில் அவனை மிஞ்ச ஆளே கிடையாது! அவனுக்கு அதே வேலை. ஒவ்வொரு விடுமுறை நாளிலும், அவனைத் தூண்டிலோடு ஆற்

சோம்பேறி !

அப்பா :

கண்ணு, உன்றன் மாமாவைக்
கையோ டழைத்து வருவாய்நீ.

கண்ணன் :

மாமா வீட்டில் இல்லையெனில்–?

அ: வாசக சாலை சென்றிருப்பார்.
க: அங்கும் மாமா இல்லையெனில்–?
அ: அம்மன் கோயிலில் தேடிப்பார்.
க: கோயிலில் மாமா
இல்லையெனில்–?
அ: குளத்தங் கரையில்
அமர்ந்திருப்பார்.
க: குளத்தங் கரையிலும்
இல்லையெனில்–?
அ: கொய்யாத் தோப்பில்
புகுந்திருப்பார்.
க: தோப்பிலும் மாமா
இல்லையெனில்–?
அ: சும்மா திரும்பி வந்திடுவாய்.
க: திரும்பிச் சும்மா வருவதற்கேன்
தேடி அலைந்திட வேண்டுமப்பா?

றங் கரையில் பார்க்கலாம். உனக்குத் தூண்டிலைப் பிடிப்பது எப்படி என்றுகூடத் தெரியாதே! இரண்டு ரூபாய்க்குப் பிடித்தது தலைவலி!'' என்றாள் மாலதி.

''இப்போது என்ன செய்வது?'' என்று கவலைப்பட்டான் செல்வம்.

மாலதி சிறிது நேரம் யோசனை செய்தாள். பிறகு, ''செல்வம், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்தால் வெற்றி நமக்குத்தான்'' என்று கூறிவிட்டு, செல்வத்தின் காதோடு ரகசியமாக ஏதோ சொன்னாள். அதைக் கேட்ட செல்வம் தலையைப் பலமாக ஆட்டினான். அவன் முகம் மலர்ந்தது.

''சபாஷ், மாலதி! நீ சொன்னபடியே செய்து விடுகிறேன். நாளைக் காலையில் நீயும் வந்துவிடுகிறாயா?'' என்று கூறிவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான் செல்வம்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலை, சைக்கிளில் ஒரு பையை மாட்டிக் கொண்டு மிகவும் அவசரமாக எங்கோ போய்விட்டு வந்தான், செல்வம். அப்போது அங்கே வந்தாள் மாலதி. இருவரும் ஆற்றங் கரைக்கு சைக்கிளில் சென்றனர். அங்கே பாலு தயாராகக் காத்திருந்தான்.

''மணி என்ன ஆகிறது?'' என்று கேட்டாள் மாலதி.

செல்வம் கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, ''எட்டடிக்க இன்னும் மூன்று நிமிஷங்கள் இருக்கின்றன'' என்று கூறிக் கொண்டே கடிகாரத்தைக் கழற்றி மாலதியிடம் கொடுத்தான்.

உடனே பாலு, ''சரி, சரியாக எட்டுமணிக்கு, இருவரும் தூண்டிலை ஆற்றில் வீச வேண்டும். ஒன்பது மணிக்குள் யார்தான் பெரிய மீனைப் பிடிக்கிறார்களோ, பார்ப்போம்'' என்றான். இருவரும் தூண்டில்களைத் தயாராகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.

"ரெடி. ஒன்...டூ...த்ரீ" என்றாள் மாலதி. இருவரும் தூண்டில்களைத் தண்ணீரில் வீசினார்கள்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. பாலு சிறு சிறு மீன்களையாவது பிடித்துக் கொண்டிருந்தான். ஆனால், செல்வமோ எதையுமே பிடிக்க வில்லை. திடீரென்று செல்வத்தின் தூண்டில் அசைந்தது. செல்வம் சுண்டி இழுத்தான். என்ன ஏமாற்றம்! தூண்டிலில் மீன் சிக்கவில்லை. ஆனாலும், அதில் கோத்து வைக்கப்பட்டிருந்த புழுவைத் தின்றுவிட்டுப் போய்விட்டிருந்தது ஒரு மீன்!

இன்னும் சிறிது நேரம் சென்றது. செல்வம் இப்போது கூட ஒரு மீனையும் பிடிக்கவில்லை. "இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கிறது" என்று பரீட்சை நடக்கும்போது ஆசிரியர் சொல்வதுபோல் சொன்னாள் மாலதி. நேரம் செல்லச் செல்லப் பாலுவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. ஆனால், செல்வமோ, முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டான்.

"இன்னும் கால்மணி நேரம் தான் இருக்கிறது" என்று அறிவித்தாள் மாலதி. பிறகு ஆற்றங் கரையில் அங்குமிங்கும் உலாவ ஆரம்பித்தாள். செல்வம் மெதுவாகக் கண்ணைச் சிமிட்டினான். உடனே மாலதி, ஆற்றங்கரை ஓரத்தில் பூத்திருந்த குவளைப் பூக்களைப் பறிப்பது போல் தண்ணீரின் பக்கத்தில் சென்றாள். சிறிது நேரத்தில் "ஐயோ!" என்ற அலறல் எழுந்தது. அதைத் தொடர்ந்து 'தொபீர்' என்று மாலதி தண்ணீருக்குள் குப்புற விழுந்தாள்!

திடுக்கிட்டு அந்தப் பக்கம் திரும்பிய செல்வம், "ஐயையோ! என்ன செய்வேன்? எனக்கு நீந்தக்கூடத் தெரியாதே!" என்று தவித்தான். ஆனால், பாலு சும்மா இருக்கவில்லை. உடனே, தூண்டிலை அப்படியே விட்டு விட்டுத் தண்ணீரில் பாய்ந்தான்.

செல்வம் இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். தூண்டிலை வெளியே எடுத்தான். அருகிலே தயாராக வைத்திருந்த பைக்குள் கையை விட்டு, தான் காலையில் 'மார்க்கெட்டி'லிருந்து வாங்கிவந்திருந்த பெரிய மீனைக் கையிலே எடுத்தான். அதைத் தூண்டில்

பாட்டி: பொய் சொன்னால், சொர்க்கலோகத்துக்குப் போகவே முடியாது.

பேரன்: சரி பாட்டி, நீ பொய்யே சொன்னதில்லையா?

பாட்டி: ஒன்றிரண்டு தடவை சொல்லியிருப்பேன்.

பேரன்: அப்பா, அம்மா, மாமா, மாமி இவர்களெல்லாம்—?

பாட்டி: ஒரு தடவை இரண்டு தடவை பொய் சொல்லித்தான் இருப்பார்கள்.

பேரன்: அடடே! அப்படியானால், நீங்கள் யாருமே சொர்க்கத்து வரமாட்டீர்கள். நான்மட்டும்தான் அங்கே போய் தனியாயிருக்கணுமா?

பல் பிடுங்கச் சங்கீதம்!

அமெரிக்காவிலே ஒரு பல் டாக்டர் இருக்கிறார். அவர் விநோதமான ஒரு நாற்காலியை வைத்திருக்கிறார். பல் பிடுங்கிக்கொள்ள வருபவர்களை அந்த நாற்காலில் உட்கார வைத்துப் பல்லைப்பிடுங்குவார், அந்த டாக்டர். அப்போது, நோயாளிக்கு வலியே தெரியாதாம்! மிகவும் சுகமாக இருக்குமாம்! காரணம் என்ன தெரியுமா? அந்தவிநோத நாற்காலியிலிருந்து மிகவும் இன்பமயமான சங்கீதம் கிளம்புமாம்! அதைக் கேட்டு, அதிலேயே லயித்துப் போய் விடுவாராம் நோயாளி!

முள்ளிலே மாட்டி, தண்ணீருக்குள் போட்டுவிட்டு, தூண்டிலை அப்படியே கரையில் வைத்தான். பிறகு ஓடிவந்து, "ஐயையோ! மாலதி! மாலதி!" என்று கத்திக்கொண்டே இருந்தான்.

மாலதி தண்ணீருக்குள் தத்தளித்துக்கொண்டிருந்தாள். மீன் குஞ்சுபோல நீந்தத் தெரிந்த அவள் எவ்வளவு சாகஸம் செய்கிறாள் என்பதை நினைத்தபோது, செல்வத்துக்குச் சிரிப்பை அடக்குவது பெரும்பாடாகப் போய்விட்டது.

பாலு, ஒரு வழியாக மாலதியை வெளியே கொண்டு வந்தான். அதற்குள் செல்வம் ஓடிப்போய், "மாலதி! மாலதி!" என்று கூப்பிட்டான். உடனே மாலதி, "எனக்கு ஒன்றுமில்லை. கால் வழுக்கி விட்டது. அதனால் தான் விழுந்துவிட்டேன். நீங்கள் இருவரும் உங்கள் வேலையைக் கவனியுங்கள்" என்று கூறிவிட்டுத் தன் பாவாடையைப் பிழிய ஆரம்பித்தாள். பாலுவும், செல்வமும் தங்கள் தங்கள் இடத்துக்கு வந்தார்கள்.

"இன்னும் ஐந்து நிமிஷங்களே இருக்கின்றன" என்று மீண்டும் அறிவிப்பாளர் வேலையைத் தொடர்ந்தாள் மாலதி. அதே சமயத்தில் செல்வத்தின் தூண்டில் பலமாக அசைந்தது. செல்வம் தூண்டிலைச் சுண்டி இழுத்தான். தூண்டிலில் ஒரு பெரிய மீன் மாட்டிக் கொண்டிருந்தது! அதைக் கண்டதும் பாலு, 'ஆ!' என்று வாயைப் பிளந்தான்.

அப்புறம் என்ன? பாலு பேசாமல் தன் சட்டைப் பையிலிருந்த இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, செல்வத்திடம் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் போய்விட்டான்.

∴ ∴ ∴

அன்று மாலை செல்வமும் மாலதியும், ஓர் ஆங்கிலப் படத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது செல்வம், "பாவம், பயல் நன்றாக ஏமாந்துவிட்டான். உன் நடிப்புப் பிரமாதம்!" என்றான் மாலதியிடம்.

"பாவம். எனக்கு நன்றாக நீந்தத்தெரியும் என்று அவன் கண்டானா என்ன?" என்றாள் மாலதி.

"அல்லது, நான் தூண்டிலில் பெரிய மீனைக் கோத்துப் போட்டதைத்தான் அவன் கண்டானா என்ன?" என்றான் செல்வம்.

"அது சரி, இனி இப்படியெல்லாம் வீண் ஜம்பம் பேசி மாட்டிக் கொள்ளாதே!" என்று எச்சரித்தாள் மாலதி.

அதிசயப் பெட்டி

"அக்கா, எங்கள் வீட்டிலே ஓர் அதிசயப் பெட்டி வந்திருக்கிறதே, பார்த்தாயா?" என்று பக்கத்துத் தெரு பத்மாவைப் பார்த்துக் கேட்டான் மணி.

"அது என்னடாப்பா அதிசயப் பெட்டி?" என்று கேட்டாள் பத்மா.

"என்னோடு வாயேன்; காட்டுகிறேன்" என்று கூறி அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே அப்பா வாங்கி வந்திருந்த உயரமான ஒரு பெட்டி அருகே சென்றான்; பெட்டியைத் திறந்தான்; உள்ளே பழங்கள், காய்கறிகள், புட்டியிலே பானங்கள் எல்லாம் இருந்தன.

"என்னடா மணி, இந்தப் பெட்டியிலே துணிமணிகளை வைக்காமல் ஏதேதோ வைத்திருக்கிறீர்களே!" என்றாள் பத்மா.

"இது துணிமணிப் பெட்டியல்ல; ஐஸ்பெட்டி! இதிலே பழங்கள், காய்கறிகளை வைத்தால் அப்படியே வாடாமல், வதங்காமல், கெடாமல் பல நாட்கள் இருக்கும்! சாதாரணத் தண்ணீரைப் ட்டியிலே ஊற்றி இதிலே வைத்தால் ஐஸ் தண்ணீராகிவிடும்! தோ பார், முந்தாம் நாள் வைத்த இந்த ஆப்பிள் எப்படிப் புத்தம் திதாய் இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே ஓர் ஆப்பிளை டுத்துப் பெருமையாகக் காட்டினான் மணி.

"அடடே! அப்படியா விஷயம்!"

"உம்...இன்னும் சொல்லட்டுமா? இதிலே இருக்கிற தட்டிலே தாரணத் தண்ணீரை ஊற்றி வைத்தால் அது ஐஸ் கட்டிகளாக மாறிவிடும்! ரயில், கப்பல், விமானம் முதலியவற்றிலே பால், பழம், முட்டை, இறைச்சி இந்த மாதிரி உணவுப் பண்டங்களை அதிக நாள் கெடாமல் வைத்திருக்க இது போலப் பெட்டிகள் இருக்கும்! எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் கொண்டு போகலாம்! இந்தப் பெட்டி மின்சார சக்தியால்தான் ஓடுகிறது. ஆனாலும் சில பெட்டிகள் மண்ணெண்ணெயின் உதவியால் கூட ஓடுவதாக......"

"உன் அப்பா சொன்னாராக்கும்!" என்று கூறிச் சிரித்தாள் பத்மா.

"இல்லாதபோனால் எனக்கு எப்படித் தெரியும்?" என்று சொல்லிக்கொண்டே மணியும் சேர்ந்து சிரித்தான்

இக்காட்சியையே அட்டையில் காண்கிறீர்கள் நீங்கள்,

செய்தி கேஹங்கள்!

பம்பாய் மாணவரும் பவுண்டன் பேனாவும்

எஸ். எஸ். எல். ஸி. வகுப்பு வரை எந்த மாணவனும் பவுண்டன் பேனா உபயோகப்படுத்தக் கூடாது என்று பம்பாய் சர்க்கார் ஒரு தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள்! பவுண்டன் பேனா விலை அதிகமாக இருப்பதாலும், பவுண்டன் பேனாவால் எழுதினால் கையெழுத்து அபிவிருத்தியடையாமல் போவதாலுமே இந்தத் தடை உத்தரவு எனத் தெரிகிறது.

மலை ஏறும் மங்கை

எவரெஸ்ட் சிகரத்துக்கு மேற்கே உள்ள கௌரி சங்கர் சிகரத்தை (23,440 அடி உயரம்) அடைய ஸ்விட்சர்லாந்திலிருந்து ஒரு மலையேறும் கோஷ்டி வந்திருக்கிறது. அந்தக் கோஷ்டியில் ஸ்ரீமதி கிளாடிகோகன் என்ற 35 வயது ஸ்திரியும் இருக்கிறாள். மலை ஏறும் அனுபவம் அவளுக்கு நிறைய உண்டு. அவளுடைய கணவர்கூட மலையேறுவதில் மிகுந்த பிரியம் உள்ளவராம். ஆனால், அவர் மலையேறும்போது ஒரு விபத்திலே சிக்கி மாண்டுவிட்டாராம்.

ரஷ்யாவில் இந்தியப் பட விழா

சோவியத் ரஷ்யாவில் உள்ள 19 முக்கிய நகரங்களில், கூடிய விரைவில் இந்திய சினிமா விழா ஒன்று ஆரம்பமாகப் போகிறது. அந்த விழாவில் இந்தியாவில் தயாரித்த 5 கதைப் படங்களும், 7 வர்ணனைப் படங்களும் காட்டப்படும். ரஷிய மொழியில் அவற்றை 'டப்' செய்திருக்கிறார்கள். அந்த விழாவில் இந்திய சினிமாக் கோஷ்டி ஒன்றும் கலந்துகொள்ளும். விழா நான்கு வாரங்கள் நடைபெறும். ஒரு வெளிநாட்டில் இந்தியப் பட விழா நடைபெறுவது இது முதல் தடவை.

பள்ளிக்கூடத்துக்குப் பத்து ஏக்க

உத்தரப் பிரதேச சர்க்கா கல்வி முறையில் ஒரு ப மாறுதல் செய்திருக்கிறார்க அதன்படி கிராமப் பிரதே களில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் பத்து ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். விவசாயத்தை அங்கே டாயப் பாடமாக்கி, ஒவ்வொரு மாணவனும் தினந்தோறும் 2 மணி நேரம் நிலத்தில் வேலை செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள்.

★

199265
சென்னை-600 008